**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 135 /2019 PW . 6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிகலா | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : ஆய்வாளர் |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

---

**(எதிரி ஆஜரில்லை.)**

**<u>26.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது எஸ் .வி.மங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு . கோடிலிங்கம், திரு. மகேந்திரன் அவர்கள் பணிமாறுதல் காரணமாக வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதால் இவ்வழக்கின் கால தாமத்தை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி அவருக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி பெற்று எதிரி தரப்பு ஆட்சேபணையின்றி சாட்சியம் அளிக்கிறேன் . மேலும் மேற்படி காவல் ஆய்வாளர் அவர்களின் கையொப்பம் , கையெழுத்து ஆவணங்கள் பொறுத்து எனக்கு தெரியும். கடந்த 12.05.2013 ம் தேதி எஸ்.வி.மங்கலம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முகமது தாரிகுல் அமீர் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த இதச பிரிவு 304A காவல் நிலைய குற்ற எண் 57/2013 வழக்கை பதிவு செய்துள்ளார்.

2. காவல் ஆய்வாளர் அன்றையை தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் ராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **( மேற்படி பார்வை மகஜர் அ .த.சா.ஆ–4 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ–5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 வரையானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . 13.05.2013 ம் தேதி சிங்கம்புணரி அரசு மருத்துவமனை சவகிடங்கில் வைத்து வழக்கில் இறந்து போன சேதுராமன் மகன் செந்தில் குமார் என்பவரின் பிரேத்தின் மீது 08.00 மணி முதல் 10.00 மணிவரை பஞ்சாயத்ததார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தார். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அ .த.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

4. பின்னர் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை தலைமைகாவலர் 665 சேகர் வசம் ஒப்படைத்து வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செந்தில் அரசு உதவி மருத்துவர், அரசுமருத்துவமனை சிங்கம்புணரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்றிதழ் பெற்றார் . **( அந்த பிரேத பரிசோதனை சான்றிதழ் அ.த.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின்னர் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN 38 AM 75 48 என்ற மேக்சிகேப் வாகனத்தையும், TN 63 L49 42 என்ற பஜாஜ் பல்சர் இரு சக்கர வாகனத்தையும், மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு உட்படுத்தினார். மேற்படி வாகனங்களின் தணிக்கை செய்த மோட்டா வாகன ஆய்வாளர்கள் திரு . விஸ்வநாதன் மற்றும் திரு . ராஜாபாண்டியன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகள் பெற்றார் . **( அந்த TN 38 AM 75 48 என்ற மேக்சிகேப் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ .த.சா.ஆ–8 ஆகவும், TN 63 L49 42 என்ற பஜாஜ் பல்சர் இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. இவ்வழக்கின் எதிரி முத்துகுமாரநாடார் சுவாமி மகன் சுரேஷ் என்பவரை நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார். பிரேத பரிசோதனை அலுவலுக்கு நியமிக்கப்பட்ட தலைமை காவலர் சேகர் , முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்புஆய்வாளயர் முகமது தாரிகுல் அமீர் ஆகியோர்களை தனித்தனியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது வழக்கு பதிவு செய்த பிரிவின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

7. இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு சிவகங்கை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை . இவ்வழக்கில் காயம் ஏற்பட்ட முத்துகருப்பன் என்பவருக்கு சிசிக்கையளித்த சிங்கம்புணரி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு . செந்தில் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் . ( **மேற்படி விபத்துபதிவேடு அ.த.சா.ஆ–7 மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ–8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது** ). முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் சந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . இவ்வழக்கின் கடந்த 15.11.2021 ம் தேதி விசாரணையை முடித்து எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த பிரிவுகளின் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

8. நான் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி கிடையாது . வழக்கு கோப்பினை நான் பார்ரவையிட்டேன் . அன்றையை தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார் . சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை. சம்பவ இடத்தின் அமைப்பு எனக்கு தெரியாது . ஆவணங்களின் அடிப்படையில் சம்பவ இடத்திலிருந்து இறந்தவரின் ஊர் எவ்வளவு கி .மீ தூரம் இருக்கும் என்றால் 10 கி.மீ இருக்கும் . விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் இறந்தவரின் உடன்பிறந்தவர்கள் மற்றும் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

9. மாதிரி வரைபடத்தில் இரத்தக்கறை , சிதறிய உடைந்த பாகங்கள் சாலையில் எந்த பகுதியில் இருந்தது என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான் . எதிரி ஓட்டியதாக சொல்லப்படும் வாகனம் டூரிஸ்ட்வேன் என்றால் சரிதான் . எதிரி கோயம்புத்தூரைச் சார்ந்தவர் என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனத்தில் பயணம் செய்தவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . சம்பவ இடத்திற்கு அருகே யிருந்த நபர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . வழக்கு பதிவுசெய்வதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் யாரும் செல்லவில்லை.

10. விசாரணைஅதிகாரி வாகனங்கள் எவ்வளவு வேகத்தில் வந்ததுஎன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான் . என்ன வகையான ஆஜாக்கிரதை, யாருடைய ஆஜாக்கிரரை என்று விசாரணை அதிகாரி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் . பஞ்சாயத்தார்கள் உறவினர்கள் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி முறையாக விசாரணை செய்யாமல் எந்த வாகனத்தையும் கவனக்குறைவினார் விபத்து ஏற்பட்டது என்பதை விசாரிக்க தவறி விட்டார் என்றாலும், சம்பவ இடத்தில் சான்றுபொருட்களை முறையாக கைப்பற்ற தவறி விட்டார் என்றாலும், வரைபடம் சம்பவ இடத்திற்க முரணாக தயார் செய்துள்ளார் என்றாலும், இறந்தவருக்கு இழப்பீடு பெற்று தர வேண்டி ஒரு தலைபட்சமாக விசாரணை செய்துள்ளார் என்றால் சரியல்ல.